24th July 1962]

கீழ் பவானி வாய்க்கால் (மதகை மாற்றுதல்)

* 597 கேள்வி.—**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழ் பவானி வாய்க்கால்களில் மதகை மாற்றிக்கொடுக்குமாறு விண்ணப்பங்கள் வந்தனவா ?

(இ) எத்தனை மதகுகள் மாற்றிக்கொடுக்கப்பட்டன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) so far, changes of sluices have been effected in 60 cases.

திரு. க. ர. நல்லசிவம் : இந்த மதகை மாற்றுகிற வேலையிலே அநேகமாக சில சமயங்களில் விண்ணப்பம் போட்டு 2–3 ஆண்டுகள் கழித்து வேலை ஆகிறது. அதனால் குறிப்பிட்ட நிலங்கள் சாகுபடிக்கு வருவது கிடையாது. விண்ணப்பம் போட்டால் அதிலிருந்து ஆறுமாதம் அல்லது ஒன்பது மாதம் என்று ஒரு குறிப்பிட்ட கால அளவு வைத்து மதகை மாற்றிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : விவசாயிகள் மதகுகளை மாற்ற வேண்டு மென்று கோரிக்கை போட்டவுடனே அதற்கு வேண்டிய முயற்சிகளை அதிகாரிகள் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மதகை மாற்றுவதற்கு முன் அதனால் ஏற்படும் பிரச்னைகளை நன்றாகத் தெரிந்து, அறிந்து முடிவு எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மற்றவர்களுக்கு அதனால் பாதகம் ஏற்படலாம். காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால், இப்படி பரிசீலனை செய்வதால் ஏற்படலாம். இதை துரிதப்படுத்த புதிய முயற்சிகளை இந்த இலாகா எடுக்கும் என்று கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகள் (பெண்ணாடம்)

* 598 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் பெண்ணாடத்தில் துவங்க இருக்கும் அருணா சர்க்கரை ஆலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : The sugar factory at Pennadam referred to in the question in the private sector and is in the stage. Government cannot say precisely when it will be formative commissioned.

தொழிற்சாலைகள் (அரக்கோணம்)

* 599 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் ஏரோட்ரூமில் (Air field) அரசினர் தபால் தந்தி இலாகாவின் தொழிற்சாலை ஒன்றை நிறுவனம் செய்ய ஜெனரல் செகரட்டரி அவர்கள் 1960-ம் ஆண்டு பார்வையிட்டு சென்றதன் முடிவு என்னவாயிற்று ?

(இ) மேற்படி இடத்திலேயே சிறு தொழில் இலாகா இயக்குனர் அவர்கள் சேகரித்து போன விவரங்களை வைத்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) and (இ): A large block of land near Arkonam measuring about 1,000 acres was considered to be suitable for the location of large scale industrial undertakings in the public sector. Data on soil conditions, water potential, etc. of this site were gathered by the State Small Scale Industries Branch